**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.54/2023**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. S.தமிழ்செல்வி (PW6 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on th **20th day of January 2026** by V.Nivedha, Assistant DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொடுமுடிகாவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.05.2023ம் தேதியன்று நான் சிவகிரி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்று இரவு சுமார் 19.00 மணிக்கு சிவகிரி கொல்லங்கோவில் கிராமம், கந்தசாமிபாளையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் மகன் கஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.82/2023, ச/பி.279, 304(A) இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்குக் கோப்பை புலன் விசாரணையின் பொருட்டு கொடுமுடி காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :-**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அ.சா.1இட்ம் புகார் பெறவில்லை என்றாலும், அதன் பேரில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.20 09:22:43 +0530

சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் உண்மையான புகார் வழக்கிற்கு எதிராக உள்ளதால் அது மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.20 09:22:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.